09.09.2026

அ.வ.எண். 87/2024

பி.சா.1 – திரு. திருக்குமார் , த/பெ. நடேசன்

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmii Junior Assistant on 09.09.2026 is accordance with the provision of Act X of 3331

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் 9 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். நான், 1ம் வாதியின் வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் குடோனில் தங்கியிருக்கிறேன், 1ம் பிரதிவாதி வீட்டில் குளித்துவிட்டு கிளம்புவேன்.தறிக்குடோனில் தங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்றால் சரியல்ல. அது தொழிற்கூடம் என்றால் முன்பு மெஷின்கள் இருந்தது தற்போது இல்லை. தாவா சொத்து வாதியின் தந்தை சுப்பிரமணிக்கும், வாதியின் தாயார் சாந்தாமணிக்கும் கூட்டாக கிரயம் பெற்ற வகையில் பாத்தியம் என்றால் சரிதான்.

2. வாதிக்கும், வாதியின் தாயாருக்கும், வாதியின் தங்கைக்கும் வாரிசு முறையில் தாவா சொத்து பாத்தியம் என்றால் தெரியாது. வழக்கு சொத்தானது பாகம் பிரிக்கப்படாத சொத்து என்றால் சரிதான். பி.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தை யார் எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்று ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை. வாதிக்கும், பி.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சம்மந்தம் உள்ளது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அவரது தாயார் கையொப்பம் உள்ளது.

3. பி.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் ஏற்பட்டபோது, என்னிடம் ரூ.10 இலட்சம் பணம் இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையிலும், எதிர் வழக்குரையிலும் நான் குறிப்பிட்ட தேதியில் என்னிடம் ரூ.10 இலட்சம் பணம் இருந்தது சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் 24.08.2021 அன்று

ரூ.10 இலட்சம் கொடுத்ததாகவும், 26.08.2021 அன்று பாக்கி தொகை ரூ.8 இலட்சத்தை நண்பர்கள் மூலமாக கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் 24.08.2021 அன்று ரூ.10,00,000/-, 16.11.2021 அன்று ரூ.4,30,000/- இலட்சமும், 30.03.2022 அன்று ரூ.4,50,000/- இலட்சம் கொடுத்துள்ளேன். மேற்படி தேதியில் சாட்சிகள் இருந்ததாக எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் நினைவில்லை. 26.08.2021 அன்று வாதி சுவாதீனம் ஒப்படைத்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. நான் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி என் மீது சூலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் நான் அத்துமீறி நுழைந்ததாக வழக்கு தாக்கல் செய்து CC.No.26/2024 வழக்கு சூலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்மந்தமாக சூலூர் காவல் நிலையத்தில் நான், வாதி மற்றும் அவரது தாயார் சாந்தாமணி மீது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

5. CC.No.26/2024 வழக்கில் நான் முன் பிணையம் பெற்றேன். வழக்கு சொத்து சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லையா என்றால் விசாரித்தனர். வாதியின் சித்தி வசந்தாமணி மற்றும் சித்தப்பா ஆறுமுகம், சித்தி மகன் பாலசூர்யா ஆகியோர் மீது PCR வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் நான் வசிக்கும் பகுதியில் வசித்து வருகின்றனர். மேற்படி நபர்கள் வாதிக்கு ஆதரவாக இருந்தனர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும், வாதியின் தாயாரும் அக்கா, தங்கைகள் ஆவார்கள். அவர்களுக்குள் பேச்சுவார்த்தை இல்லை என்றால் எனக்கு தெரியாது.

6. வாதி மேற்படி வழக்கின் CC.No.26/2024 புகாரிலோ, முதல் விசாரணையிலோ ஒப்பந்தம் போட்டதாகவோ, தொகை கொடுத்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் எங்களுக்கு ஆதரவாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றால் இல்லை. மேற்படி குற்ற அறிக்கையில் எனக்கு ஆதரவாக தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

போலீசார் எனக்கு ஆதரவாக இருந்ததால் வாதியின் சித்தி வசந்தாமணி மற்றும் சித்தப்பா ஆறுமுகம், சித்தி மகன் பாலசூர்யா ஆகியோர் மீது PCR வழக்கு பொய்யாக தாக்கல்செய்துள்ளனர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில், முழுமையான சுவாதீனத்தில் வாதி உள்ள நிலையில் அவரது சுவாதீனத்தை இடையூறு செய்ததால் வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. நானும், 1ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து கொண்டு பி.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் இல்லை.

7. 1ம் பிரதிவாதியின் தூண்டுதலின் அடிப்படையில் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டுநர் வேலை செய்வதால் ரூ.18,00,000/- ஒப்பந்தம் செய்ததாக சொல்லும் தொகை இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என சாட்சியம் அளிக்கிறார். பி.சா.ஆ.1 ஆவணம் போலியானது என்றும் அதை நானும், 1ம் பிரதிவாதியும் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur